**செ.வெ.எண்-01** **நாள்-01.09.2019**

**அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடைபெற்ற (GROUP – IV) தேர்வு நடைபெறும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய் இஆப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.**

அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி- IV (GROUP IV) தேர்வு நடைபெறும் அரியலூர் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் உள்ள தேர்வு மையத்தினை **மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய் இஆப., அவர்கள்** இன்று (01.09.2019) நேரில் பார்வையிட்டு தெரிவித்ததாவது:-

அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி-IV (GROUP IV) தேர்வுகள் 01.09.2019 அன்று ஞாயிற்று கிழமை முற்பகல் மட்டும் அரியலூர், செந்துறை, உடையார்பாளையம், ஆண்டிமடம், ஆகிய 4 வட்டங்களிலும் 54 தேர்வு கூடங்களில் 17,600 தேர்வாளர்கள் தேர்வு எழுத விண்ணப்பித்துள்ளனர். அவற்றில் **வருகை புரிந்தவர்கள் 14763, தேர்வு எழுத வருகைபுரியாதவர்கள் 2837 நபர்கள், மேலும்,** நமது மாவட்டத்தில் இத்தேர்வின் கண்காணிப்பிற்காக துணை ஆட்சியர் நிலையில் 9 பறக்கும் படை அலுவலர்கள், 9 இயங்கு குழுக்கள் மற்றும் கண்காணிப்பாளர் / உதவியாளர் நிலையில் தேர்வுக்கூட நடைமுறைகளை கண்காணித்திட 54 ஆய்வு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் தேர்வு பாதுகாப்பு பணிக்கு காவலர் / ஆயுதம் ஏந்திய காவலர்களும் மாவட்டம் முழுவதும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என மாவட்ட ஆட்சித்தலைவர் **மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய் இஆப., அவர்கள்** தெரிவித்தார்கள்.

இவ்வாயிவின்போது, அரியலூர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் நாகராஜன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**